# கலாதீபம்

KALADEEPAM

කලාදීපම්

ஸ்தாபிதம் 2020 | 01.07.2024 | தீபம் 25


# கலாசாலையில் சுற்றாடல் தினத்தை ஒட்டி

# விஞ்ஞான கணித உபகரணக் கண்காட்சி

## மற்றும் மரம் நாட்டல் நிகழ்வுகள் சிறப்புற இடம்பெற்றன

உலக சுற்றாடல் தினத்தை அடையாளப்படுத்தும் முகமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கணித விஞ்ஞான மன்றம் ஏற்பாடு செய்த விஞ்ஞான கணித உபகரண கண்காட்சி மற்றும் மரம் நாட்டல் நிகழ்வுகள் 05.06.2024 புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வின் ஆரம்பத்தில் தேசியக்கொடி, கலாசாலைக் கொடி, சுற்றாடல் கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டன. தேசிய கீதம், சுற்றாடல் கீதம் என்பனவும் இசைக்கப்பட்டன . தொடர்ந்து ஆசிரிய மாணவர்களும், விரிவுரையாளர்களும் கலாசாலை சுற்றாடலை தூய்மையாக பேணுவோம் என உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜாவும் சிறப்பு விருந்தினராக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் க. சுபோகரனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவன் இ.செந்தூர்ச்செல்வன் நெறிப்படுத்தினார். சுற்றாடல் பாதுகாப்புப் பற்றிய ஆசிரிய மாணவர் உரையினை கணிதநெறி ஆசிரிய மாணவன் ச. சந்திரகுமார் ஆற்றினார்.

வரவேற்புரையினை ஆசிரிய மாணவி திருமதி த. கீற்றாவும் விருந்தினர்கள் தொடர்பான அறிமுகவுரையை கல்வி அபிவிருத்திக்கான பிரதி அதிபர், த. கோபாலக்கிருஷ்ணனும் ஆற்றினர்.

→ தொடர்ச்சி 5ம் பக்கம்









01.06.2024 — 30.06.2024 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவார்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.



**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் கவிஞர் சு முரளீதரன் ஓய்வுபெற்றார்

கல்விச் சேவையில் பல்வேறு பதவிநிலைகளில் சேவையாற்றிய கவிஞர் சுப்பிரமணியம்பிள்ளை முரளிதரன் 07.06.2024 வெள்ளிக்கிழமை அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். 08.06.2024 அன்று அவரது அறுபதாவது பிறந்தநாள் ஆகும்.

மலையக மண்ணின் மைந்தரான இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் விசேட தர உத்தியோகத்தர் ஆவார். விஞ்ஞானப் பட்டதாரியாகிய இவர் சிறந்த கவிஞர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இலங்கையில் ஹைக்கூ கவிதைத் துறையின் முன்னோடியாக இவரைக் குறிப்பிடுவர். இவர் ஆக்கிய கூடைக்குள் தேசம் என்ற ஹைக்கூ கவிதை நூல் புகழ் பெற்ற நூலாக விளங்குகின்றது. இதைவிட மலையக இலக்கியத் தளங்கள், தியாக இயந்திரங்கள், தீவகத்து ஊமைகள் உள்ளிட்ட பல நூல்களை ஆக்கி வெளியிட்டுள்ளார்.

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்து இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவாகி கொட்டகலை ஆசிரிய கலாசாலையின் அதிபர் சிறிபாத கல்வியியல் கல்லூரி பீடாதிபதி என ஆசிரிய கல்வித் துறையில் சேவையாற்றி தொடர்ந்து இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக் கிளைப் பணிப்பாளர், தமிழ்ப்பாடசாலை அபிவிருத்திக்கான பணிப்பாளர், பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான பணிப்பாளர் எனப் பல்வேறு பதவி நிலைகளை வகித்து அண்மையில் கடந்த 2024 ஏப்பிரலில் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார்.

கல்வி அமைச்சில் தமிழ் உத்தியோகத்தர் ஒருவர் எய்தக்கூடிய உயர் பதவிநிலையில் சேவையாற்றி ஓய்வு பெறும் திரு. சு. முரளிதரன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்படைய கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகத்தினர் சார்பில் எமது மனமுவந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



கலாதீபம்
කලාදීප
KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு
කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.
The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College

## நமது நோக்கு

### இலங்கைக் கல்வியில் சமத்துவம்

அனைவருக்கும் கல்வியை வழங்கும் வகையில் இலங்கையின் கல்வி கொள்கைகள் காணப்படுகின்றன. இருப்பினும் அனைவரும் பெற்றுக்கொள்ளக் கூடியவகையில் தரமான கல்வியை அடைவது ஒரு சவாலான விடயமாக காணப்படுகின்றது .இலங்கையிலே கலாநிதி கன்னங்கராவினால் கொண்டுவரப்பட்ட கல்வி மறுசிரமைப்புக்கள் கல்வி யினை சமத்துவமாக அனைவருக்கும் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமான நடவடிக்கை யாகக் கருதப்படுகின்றது..

சமத்துவம் என்பது அளவுக்கு ஏற்பவோ, தாக்கத்திற்கு ஏற்பவோ, பெறுமானத்திற்கு ஏற்பவோ, பதவிநிலைக்கு ஏற்பவோ பாகுபாடுகாட்டாமல் சமனாக மதித்தலைக் குறிக்கின்றது.

கற்றல் குறைபாடு, விசேட தேவைகளுடைய பிள்ளைகளுக்கு கற்றலுக்கான போதிய வசதிகள் இன்மை என்பது கல்வியைச் சமத்துவப்படுத்துவதில் உள்ள குறைபாடு ஆகும்.

அதேவேளை பாடசாலைகளுக்கு இடையிலான ஆசிரியர் பங்கீடு என்பது கல்வியினைச் சமத்துவத்தை ஏற்படுத்துவதில் உள்ள சவாலான விடயம் ஆகும். குறித்த ஒர் ஆசிரியர் ஒரு வாரவேளையில் குறைந்தது 20 மணித்தியாலம் கற்பித்தலில் ஈடுபடவேண்டும் என கூறப்பட்டுள்ள போதும் கிராம நகரப்புற ஆசிரியர் பரப்பலுக்கு ஏற்ப இது வேறுபடுகின்றது. பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை பாட அடிப்படையில் உள்ளமை சமத்துவத்தை ஏற்படுத்துவதிலுள்ள பிரதான குறைபாடு ஆகும்.

இதேவேளை பத்திரிகையில் வெளிவருகின்ற மணிவிழா வாழ்த்துக்களை நோக்கும் போது குறித்த ஆசிரியர்கள் 15,20 வருடங்களாக ஒரே பாடசாலையில் கற்பித்த நல்லாசிரியராகக் காணப்படுகின்றார். ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக தேசியக் கொள்கை உள்ள போதும், அதனை நடைமுறைப்படுத்தாமை கல்வியில் சமத்துவத்தை ஏற்படுத்துவதிலுள்ள மிகப் பெரிய குறைபாடு ஆகும்.

## கற்பித்தல் பயிற்சி ஆரம்பம்
## 01.07.2024 தொடக்கம் 19.07.2024

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் பிரதான அங்கமான கற்பித்தல் பயிற்சியானது இடம்பெறவுள்ளது

2022/2023 கல்வி ஆண்டு ஆசிரிய மாணவர்களுக்கு நிறைவு நிலைக் கற்பித்தல் பயிற்சியாகவும், 2023/2024 கல்வி ஆண்டு ஆசிரிய மாணவர்களுக்கு முதலாவது கற்பித்தல் பயிற்ச்சியாகவும் நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னோடி வேலைத்திட்டங்கள் பூர்த்தியான நிலையில் எதிர்வரும் 01.07.2024 ஆம் திகதி ஆசிரிய மாணவர்களுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மூன்று வார காலம் இப்பயிற்சியினை மேற்கொள்ள வுள்ளனர்.

முதலாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான Model Teaching Practicum தொடர்பான பயிற்சி 12.06.2024 அன்று கலாசாலையில் இடம்பெற்றது. இதனை பிரதி அதிபர் கல்வி திரு த.கோபாலகிருஸ்ணன் அவர்களும் கற்பித்தல் பயிற்சிக்கான பொறுப்பு விரிவுரையாளர் திரு பொ.சற்குணநாதன் அவர்களும் வழிப்படுத்தினர். இப்பயிற்சிக்காக யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இருந்து மாணவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.





# News in Brief - Month of June

## 03.06.2024

### Science & Maths Exhibition - 2024

To mark Kopay Teachers' College celebrated a function the Environment Day at Rathiluxmi hall under the leadership of Mr S.Laleesan. Dr.Nagamuthu Piratheeparajah - Senior Lecturer, Dept. of Geography, University of Jaffna participated as Chief Guest. And Mr T. Suboharan, Deputy Director, Central Environmental Authority, Jaffna Participated as Special Guest.

At the beginning of the event, the National Flag, College Flag and Environmental Flag were hoisted. Lecturers and Teacher Students took a pledge to keep the "College environment clean".

The welcome speech was given by Mrs T.Gittha, a Teacher Student. An introductory speech to the guests by Deputy Principal for Educational Development, Mr T. Kobalakrishnan.

Trees were planted by Chief Guest Dr. Piratheeparajah.

An exhibition of mathematical and scientific learning aids was inaugurated at the end of the event. The exhibition hall was inaugurated by the chief guest

## 12.06.2024

### " The World's Day against Child Labour"

On Wednesday Assembly under the leadership of Mr S.Laleesan. Teacher Student Mr.Haleem.Ishaq led the programme. Teacher Student Mrs. Farook Husnurrila delivered a speech to mark this day on the topic of World's Day against Child Labour. A video clip about the child Labour to reflect the theme of this day was presented by Teacher Student Ms.Oreema. It was prepared by the Teacher Students of English Farzath and Haleem.

The key note speech for this day was delivered by the guest of honor Mr.Jeyachandramoorthy. Rajeevan the principal (SLPS- II) of J/Kokuvil Namagal Vidyalayam on the topic " The importance of Technology for teacher trainees"

The introductory speech for the key-note speaker was delivered by Ms.Arullingam.Sujiwa, the lecturer of English. The respected principal of this college Mr.S.Laleesan delivered the peroration speech to thank Mr.Rajeevan and appreciated his dedicated social work.

## 15.06.2024

**Special Interview of Kaladeepam e-magazine**

was held over the Sri Lanka Broadcasting Corporation National Service (SLBC) Interview was held on 15.06.2024 Friday at 7.00pm. The Famous Broadcaster Mrs Nagapoosani interviewed the Kaladeepam e-magazine's Student Editor Mr. R.Senthurchelvan (Science Teacher Student 2023/2024 ).

## 15.06.2024

The Finial Exam Results for the batch 2020/2021 has been released by Sri Lanka Examination Department.

## 19.06.2024

### Eid Mubarak Festival

A special gathering was held to mark the Eid Mubarak day Under the leadership of College Principal. The programme organized by college Islamic Forum. And led by Y.Farsath Teacher Student, English course

Islamic Forum Petron Lecturer Mrs. Sarmila Bhaskaran graced the occasion.

Lecturer Mr V. Senthan gave an address on the origin and development of Islam at a social scientific perspective.

## 26.06.2024

### An Educational Field Trip

was held as part of the teaching learning process of Kopay Teachers' College.

This field trip was organized on Wednesday 26.06.2024 under the arrangement of Deputy Principal Mr. K. Senthilkumaran.

Forty people including Principal, Deputy Principal, Lecturers, Management Officer and Teacher students of the college participated in the field trip.

It is noteworthy here that these activities were a refresher for the learning activities of the college and a stepping stone that provided new knowledge.

# முதலாம் பக்க தொடர்ச்சி

அதிதிகளின் உரையைத் தொடர்ந்து விஞ்ஞான கணித ஆசிரிய மாணவர்களிடையே நடத்தப்பட்ட விஞ்ஞான வினாடிவினா போட்டிக்கான பரிசளிப்பு நடைபெற்றது.

தொடர்ந்து சூழலை நேசிக்கும் உணர்வுடன் மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன. இந்த மரங்களை பிரதம விருந்தினர் கலாநிதி த..பிரதீபராஜா, கலாசாலை அதிபர் ச..லலீசன், யாழ்ப்பாணம் தேசியக்கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் களான jத.அம்பிகைபாகன் மற்றும் இ.சயந்தன் ஆகியோர் நாட்டினர்.

நிகழ்வின் நிறைவாக கணித விஞ்ஞான உபகரண கண்காட்சி திறந்துவைக்கப்பட்டது. காட்சிக் கூடத்தை பிரதம விருந்தினர் திறந்து வைத்தார்

ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக்கல்வியில் உள்ள விஞ்ஞான கணித உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அருகிலுள்ள பாடசாலை மாணவர்களுடன் கலாசாலை மாணவர்களும் கலந்து இக்கண்காட்சியை பார்வையிட்டு பயன் பெற்றனர்.















# கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் அவர்களின் அதிதி உரை ஆசிரியர்களும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பமும் 12.06.2024 புதன்கிழமை நிகழ்வாக இடம்பெற்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வில் ஆசிரியரும் செயற்கை நுண்ணறிவுத் தொழினுட்பமும் என்ற பொருளில் அதிதி உரை இடம்பெற்றது. கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் இந்த உரையை ஆற்றினார்.

ஆங்கில நெறி ஆசிரிய மாணவர் ஹலீம் இர்சாக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்; ஆசிரிய மாணவர் உரையை ஆங்கில நெறி ஆசிரிய மாணவி பாருக் ஹஸ்நூறில்லா ஆற்றினார். சிறுவர் தொழிலாளர் பற்றி விவரணப் படமும் கலாசாலை ஆசிரிய மாணவரால் தயாரிக்கப்பட்டு சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு தினத்தையொட்டி திரையிடப்பட்டது.

கலாசாலை ஆங்கிலத்துறை விரிவுரையாளர் அருள்லிங்கம் சுஜீவா அதிதிக்கான அறிமுக வுரையை ஆற்றினார். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுறையாற்றினார். நிகழ்வுகள் யாவும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது..












# இஸ்லாமியர்களின் தியாகத் திருநாளை ஒட்டிய சிறப்பு ஒன்றுகூடல் 19.06.2024 புதன்கிழமை இடம்பெற்றது.

இஸ்லாமியர்களின் தியாகத் திருநாளை சிறப்பிக்கும் வகையில் அமைந்த சிறப்பு ஒன்று கூடல் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசாலை இஸ்லாமிய மன்றத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வை.பர்சாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஈகத்திருநாள் பற்றிய விளக்க உரையை இரண்டாம் வருட விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி மு.அ.அஸ்மிலா பேகம் ஆற்றினார்.

பெருநாள் குறித்த கவிதையை இரண்டாம் வருட ஆங்கிலநெறியை சேர்ந்த ஆசிரிய மாணவி ச.பார்த்திமா றிஸ்றினா வழங்கினார். இரண்டாம் வருட விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி எம் ஐ எப் சப்னா இஸ்லாமிய கீதங்கள் இசைத்தார்.
இஸ்லாமிய மன்றக் காப்பாளர் திருமதி சர்மிளா பாஸ்கரன் நிகழ்வில் ஆசியுரை வழங்கினார். விரிவுரையாளர் வே. சேந்தன் இஸ்லாத்தின் தோற்றமும் வளர்ச்சியும் சமூக விஞ்ஞானப் பார்வை எனும் பொருளில் உரையாற்றினார். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்.


















# இஸ்லாத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு சமூகவியல் பார்வை

விரிவுரையாளர் வே.சேந்தன் (SLTES - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இஸ்லாமிய ஆசிரிய மாணவர்களுக்கு ஹஜ் திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இன்றையதினம் ஆசிரியர் கலாசாலையில் இஸ்லாமிய மாணவர்களுடைய பெரு நாளைக் கொண்டாடும் அதேவேளை எங்களுக்கு ஏனைய ஆசிரியர்களிற்கு இந்த விழா பற்றிய விளக்கங்களை அளிக்கு முகமாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

எதிர்வருகின்ற கல்வி மறுசீரமைப்பிலே 21ஆம் நூற்றாண்டுக்கான திறன்கள் கற்பிக்கப்படல் வேண்டும். அதிலே ஒன்று கலாசார நுண்ணறிவு (Cultural intelligence) எனும் ஒரு திறன் இருக்கின்றது அதற்காக சமய பாடத்திலே குறித்த மாணவர்கள் தங்களுக்குரிய சமய பாடத்தை கற்க வேண்டியது மட்டுமல்லாது ஏனைய சமயங்கள் மார்க்கங்கள் தொடர்பான கோட்பாடுகளை ஒப்பீட்டு ரீதியாக கற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கே முக்கியமாக அமைவது, சமகாலம் தொடர்பிலான உலகளாவிய எழு வினாக்கள் ஆகும். சமகாலம் என்பது உலக மயமாக்கல் சூழலிலே மனித வாழ்வு நெருக்கடி மிக்கதாக உள்ளது. அவ்வாறான ஒரு நெருக்கடி மிகுந்த காலகட்டத்திலே சமூகத்தினரிடையே அமைதியின்மை உருவாகும். இன்று சர்வதேச ரீதியாக சந்தைகள் தகவல் வலைப்பின்னல்களுக்கு ஊடாக ஊடகங்களுடன் இணைக்கப்பட்டு இருக்கின்றது. அதுமட்டுமல்ல சந்தைகள் மற்றும் மூலதனம் உலக-ளாவிய ரீதியில் அரசியல் புவியியல் எல்லைகளைக் கடந்து ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதனால் இங்கு “மக்களுக்கு தொழிலின்மை” மற்றும் “மக்களில்லாத தொழில்கள்” என இருமுகப்பட்ட சமகால தொழிற் சந்தை காணப்படுகின்றது. அதாவது people without Job, Job without people. இந்த அடிப்படையிலே மனிதருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதில் செயற்கை நுண்ணறிவு குறுக்கிடுகின்றது. அந்த வகையிலே மனிதருக்கு உழைப்புக்குரிய கூலி கிடைக்காத பட்சத்தில் வாழ்வியல் நெருக்கடிகள் உருவாகும். இந்த அடிப்படையிலே சாமுவேல் பி. ஹெண்டிங்டன் எனும் பெரும் எழுத்தாளர்



ஹச் பெருநாள் சிறப்புரையிலிருந்து

உலக ஒழுங்கின் மறு ஆக்கம் நாகரீகங்களின் மோதல் எதிர்காலத்தில் உலகத்திற்கு மிக முக்கியமான பிரச்சினையாக அமையும் என்று கூறியுள்ளார்.

இன்றைய புதிய கல்விச் சீர்திருத்தம் எங்களுடைய ஆசிரிய மாணவர்கள் மற்றும் மாணவர்களை உலக-ளாவிய ரீதியில் சமத்துவம் மற்றும் சரிநிகராகவும் வாழ்வதற்கு வேண்டிய அத்தியாவசிய தேர்ச்சியாக பிற சமயங்களின் ஒப்பீட்டு அறிவு அவசியம் என்று கூறப்படுகிறது. இந்த ஹஜ் திருநாளை இஸ்லாமிய சமூகத்தினுடைய ஒரு சமூக பொருளாதார பின்புலத்திலே வைத்து நோக்குவதாக எனது பேச்சு அமைகிறது. அந்த அடிப்படையில் இஸ்லாமிய சமயம் 7 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது. அது மிக முக்கியமாக அரேபியாவிலே தோற்றம் பெறும் போது அந்த சமூகத்தினுடைய வரலாறு சமூக பொருளாதார பின்புலத்தைத் இங்கே குறிப்பிட வேண்டும். இஸ்லாமியர்கள் இதை ஜாதிகாக் காலம் என்று கூறுவர். இதிலே ஒரு முக்கியமான விடயம் என்ன என்று சொன்னால் ஆரம்பத்திலே அந்த சமூகம் மந்தைகளையும் ஒட்டகங்களையும் மேய்க்கின்ற ஒரு கால்நடை வளர்ப்பை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை கொண்ட சமூகமாக அமைந்திருந்தது.

இம் மக்கள் திரள் நிலைக்குடிகள் அல்ல மாறாக அலைக் குடிகள். அதாவது ஒட்டகத்திற்கு தேவையான அல்லது மந்தைகளுக்கு தேவையான நீர் உணவை நோக்கி மக்கள் நகர்ந்த வண்ணம் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தனர். அவ்வாறான ஒரு சமூகத்திலே மிக முக்கியமான ஒரு திருப்புமுனையாக கடல்களை ஊடறுத்து அல்லது கடற்கரைகளோடு பயணம் செய்து வணிகம் செய்வதற்காக கடற்பயணத்தினை மேற்கொள்ளும் திறனை அந்த அரேபிய சமூகம் பெற்றுக்கொண்டது.

அது எவ்வாறாயின் தமிழ்ச் சமூகத்திலே சங்க காலத்தில் முல்லைத்திணை மக்கள் திடீரென்று ஒரு பெரிய பொருளாதார பெருக்கத்தை பெற்றுக்கொண்டனர். அதாவது இரும்புத்தாதுப் பொருளை இச் சமூகம் கண்டுபிடித்ததும் அவர்கள் பெரும் மூலதனப் பெருக்கத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

முல்லைச் சமூகம் சமூக அடுக்கமைவை கொண்ட சமூகமாக மாறியது. அதாவது சங்க காலத்திலே முல்லைத்திணை மக்களில் ஒரு பகுதியினர் மிகவும் பொருளாதார வளம் நிறைத்தவராக இருந்தார்கள். இதற்கு திடீர் திருப்பு முனையாக இரும்பை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தமையே காரணமாக அமைந்தது. இதனால் முல்லை நிலத்தில் இரட்டைப் பொருளாதார நிலை காணப்பட்டது. ஒரு பகுதியினர் மந்தை மேய்ப்பவராகவும் பிறிதொரு பகுதியினர் வெளி நாட்டு வணிகம் செய்பவர்பளாகவும் காணப்பட்டனர்.

இதற்கு ஒப்பாக அரேபிய மக்களிடையே கப்பல் செய்கின்ற திறன், கப்பலிலே பயணிக்கும் தேர்ச்சி என்பன வணிகத்தின் மூலமாக பொருளாதார பெருக்கத்திற்கும், பொருளாதார மாற்றத்திற்கு காரணமாக அமைந்தன. அரேபிய மக்களிடையேயும் மந்தை மேய்ப்பு, வாணிபம் என இருவகை பொருளாதாரம் இருந்தது. இந்த இரண்டு மக்கள் குடித்தொகைக்கும் இடையே அன்றைய மக்கா நகரம் இருந்தது. இப்பொருளாதார வேறுபாடு காரணமாக சமூக அடுக்கமைவுகள் பொருளாதார சம பங்கீட்டு இன்மைகள் மக்கா நகரிலே உருவாகின.

கடல் போக்குவரத்துக்கு முன்பாகவே அந்த பிரதேசம் மத்திய தரைக்கடலுக்கும் இந்து சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட போக்குவரத்து பாதையாகவும் வணிகப்பாதையாகவும் மக்கா நகரம் அமையப் பெற்றிருந்தது. மக்கா நகரத்திலே பகுறூதீன் இனக்குழு மக்கள் செறிவாக வாழுகின்ற ஒரு இடமாக் இருந்தது.மக்கா நகரைப் பொறுத்த வரையிலே அதனுடைய சமூக பொருளாதார நிலையானதும் புவியியல் அமைவிடமும் பல்வேறு சமூகங்களும் அந்த வணிக நகரத்திலே ஒன்று கூடுவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்கியது. இது காலத்தின் தேவையாக அமைந்ததுடன் மூலதனப் பெருக்கத்திற்கும் காரணமாக இருந்தது. அந்த வகையிலே விவசாய சமூகங்கள் அங்கே காணப்படவில்லை, நீர் மிகவும் பற்றாக்குறையான வளமாக இருந்தது. ஒரு இனக் குழுவின் வாழ்க்கையில் இருந்து வர்த்தக சமூகத்தின் வாழ்க்கையாக உருமாறுகின்ற ஒரு காலகட்டத்தில் சமூகம் தளம்பல் அடைந்தது. அங்கு உருவாகிய மூலதன திரட்சியை நோக்கி அருகிலிருந்த விவசாய சமூகமும்

மக்கா நகருக்குள்ளே வந்தனர். இந்த இடத்திலே ஒரு பக்கம் இனக்குழு வாழ்க்கை முறை பிறிதொரு பக்கம் நகரமயமாக்கல் வாழ்க்கை முறை, மறுபக்கம் விவசாய வாழ்க்கை முறை என பல்தரப்பினரும் வாழுகின்ற பிரதேசமாக மக்காநகர் அமையப் பெறுகின்றது.

இதற்கும் அப்பாலே பகுத்தறிவாளர்களும் சிந்தனையாளர்களும் அந்நகரிலே கூடியிருந்தார்கள். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இருந்து பார்க்கும் போது அதனுடைய புவியியல் கட்டமைப்பு, வணிகநகரமயமாக்கம் மற்றும் பகுறூதீன் மக்களுடைய வாழ்க்கைமுறை என்பன பாரியளவில் சிதைவுறத் தொடங்குகிறது. வாழ்வியல் விழுமியங்கள் சமூகம் சார்ந்ததாக அமையாது தனிமனித வாதம் சாரந்ததாக அமையத் தொடங்குகிறது. ஆனால் இனக்குழு வாழ்க்கை முறையிலே பகுறூதீன் மக்களிடையே மிக முக்கியமான பெறுமானங்கள் காணப்பட்டன. அதிலே மிக முக்கியமான பெறுமானங்களாகக் காணப்படுபவை வீரம், தயாளகுணம், விசுவாசம் என்பன முதன்மையானவை ஆகும்.

மிக முக்கியமாக தமக்கு இல்லாவிட்டாலும் தமது மந்தைகளிலே இருக்கின்ற ஆடுகளை அறுத்து விருந்தாளிகளுக்கு உணவு கொடுப்பது அந்த மக்கா நகரத்து மக்களது தயாள குணமாக இருந்தது. அந்த தயாள குணமே இஸ்லாமிய மதம் தோன்றுவதற்கு ஒரு அடிப்படைக் காரணமாக இருந்தது. அதைவிட மிக முக்கியமான ஒரு விடயம் இனக்குழுமத்தினரிடையே தமது பெருமையை பேசுவது. இந்த பெருமைக்கு காரணம் அந்த இனக்குழு அங்கத்தவர்களிடையே இருக்கின்ற விசுவாசம். தங்களுடைய இனக்குழு மக்கள் தமக்கிடையே விசுவாசம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்ற நியதி காணப்பட்டது.

இவ்வாறு விசுவாசம் மிகுந்திருந்த இடத்திலேயே வணிகத்தினுடைய திரட்சி, செல்வச்செழிப்பு, உபரியினுடைய மிகுதி, என்பன காரணமாக தேவைக்கு மேலதிகமாக கிடைக்கப்பெற்ற செல்வச் செழிப்பு இனக்குழு வாழ்க்கை முறையை சிதைக்கத் தொடங்குகிறது. அது மட்டுமல்ல மிக முக்கியமாக, அந்த இனக்குழு வாழ்க்கைக்குள் இருக்கின்ற ஒழுங்கு சிதைவுறுகிறது.

இவ் இனக்குழுக்களின் சட்டமாக இனக்குழுத்தலைவன் தனது இனக்குழுவைக் கட்டுப்படுத்தலாமே தவிர வேறு எந்த ஒரு இனக்குழுவையும் கட்டுப்படுத்த முடியாது. இதுவே சமூக குழப்பத்திற்கும் பிறழ்விற்கும் பிரதான காரணமாக அமைந்தது. கிரேக்க சமூகத்தின் நகர அரசுகளுக்கு ஒப்பான "மாலா" எனும் இனக் குழுத்தலைவர்கள் ஒன்று கூடுகின்ற அமைப்பு மக்கா நகரில் இருந்தது. அந்த அமைப்பில் இனக்குழுக்கள் ஒன்றை ஒன்று கட்டுப்படுத்த இயலாத அளவிற்கு ஒன்றோடு ஒன்று ஒற்றுமையாக இருந்தது. அங்கே இனக்குழுத்தலைவன் தனது இனக்குழுவை கட்டுப்படுத்தலாமே தவிர வேறு எந்த ஒரு இனக்குழுவையும் கட்டுப்படுத்த முடியாது.

இச்சூழ்நிலையிலே உற்பத்திப் பெருக்கம், வணிகப்பெருக்கம், மூலதனப் பெருக்கம் என்பவை தனிமனித சொத்தை உருவாக்குகின்றது. இதுவே தனிமனித வாதம் உருவாகுவதற்கு காரணமாக அமையப் பெறுகின்றது. ஆண்களுக்கும் சரி பெண்களுக்கும் சரி அந்த தனி மனித சொத்தை பேணுவதால் இனக்குழு வாழ்வியல் பெறுமானங்கள் மற்றும் விழுமியங்கள் சிதைவுறத் தொடங்குகின்றன.

இவ்வாறு உலகில் சமூகங்கள் சிதைவுறுகின்ற காலத்திலே மிக முக்கியமான விடயங்களை கையாளுவதற்காக சில நடவடிக்கைகளை சில மனித ஆளுமைகள் எடுத்தார்கள். அதிலே மிக முக்கியமாக வட இந்தியாவிலே கௌதம புத்தர் அவர்கள் இனக்குழுமத்திலே இருந்து புதிய அரசுகள் உருவாகின்ற பொழுது சமூகம் பதட்டமாகவும் துன்பநிலையிலும் இருந்தது. கௌதம புத்தர் துன்பத்தில் இருந்து விடுபடுவதற்கு துறவறத்தை மார்க்கமாகக் கொண்டு தனது மதத்தை நிறுவினார். அதே நேரம்

கார்ள் மார்க்ஸ் சமூகத்திலே மூலதனம் திரண்டு, கைத்தொழில் புரட்சியிலே உபரி மூலதனமாக உருமாறுகின்ற போது சுரண்டல் ஏற்பட்டு சமூகம் சிதைவுற்றது. அப்போது மார்க்ஸ் தொழிலாளர்கள் புரட்சி செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். ஆனால் அரேபியாவிலே முகமது நபி(ஸல்) அவர்கள் புதிய கருத்துருவாக்கத்தை உருவாக்கி, அந்த கருத்துருவாக்கத்தை மதமாக மாற்றி, அந்த மதத்தை அந்த கால சமூகத்தின் இயக்கமாக மாற்றினார்.

அந்த வகையில் நபியினுடைய இந்த செயற்பாட்டை ஐரோப்பியருடைய மையப் பார்வையிலே பார்க்கின்ற போது, நபி அவர்கள் ஒரு கருத்துருவாக்க மேலாதிக்கத்தை உருவாக்கி, சமூகத்தை பிறழ்வில் இருந்து காப்பாற்றினார். ஆனால் ஐரோப்பாவிலே அன்டனியோ கிறாம்சி என்ற இத்தாலிய இடதுசாரி அறிஞர் தான் ஐரோப்பாவிலே கருத்துருவாக்க மேலாதிக்கத்தை தோற்றுவித்தார் அது 1930களில் 1940 களில். தான் நடைபெறுகிறது. ஆனால் காலத்தால் முந்திய ஒரு கருத்துருவாக்கச் செயற்பாட்டை உருவாக்கி அந்த கருத்துருவாக்கச் செயற்பாட்டினூடாக சமூகத்தை இயக்கி, அந்த சமூகத்தினுடைய புதிய பரிணாமத்திற்கேற்ப சமூக வாழ்வை இயைவுபடுத்துவதற்கான செயற்பாட்டை முகமது நபி(ஸல்) அவர்கள் செய்தார்கள்.

நபி அவர்கள் தனது கருத்திற்காக தீர்க்கதரிசி (Prophet) என்ற கோட்பாட்டை தன்னகத்தே எடுத்துக் கொண்டார். பதுறூதீன் இனக்குழுக்களினுடைய அற விழுமியங்களை தன்னகத்தே எடுத்துக் கொண்டு, தனது கருத்தை மதமாக முன்வைத்தார். மக்கா நகரத்து இனக்குழுக்களினிடையே இன விழுமயத்திற்கூடாக காலத்திற்கு காலம் கஉபாவை வணங்க வந்த அந்த மக்களுக்கு, இனக்குழுத் தலைவர்கள் மாலா என்ற மன்றத்திலே ஒன்று கூடி கஉபாவினுடைய பராமரிப்பும் அங்கே வருகின்றவர்களுக்கும் உணவளிப்பதும் வழமையான செயற்பாடாக இருந்தது. இச் செயற்பாடுகளை நபி அவர்கள் தனது மதத்திற்கூடாக நிறைவேற்ற முனைந்தார். அத்துடன் அத்துடன் இஸ்லாமிய மதக் கோட்பாடுகளை இணைத்து இஸ்லாமிய சித்தாந்தத்தை உருவாக்கினார்.

ககுபாவிலே ஒவ்வொரு இனக்குழுவும் தன்னுடைய தெய்வங்களை் வைத்ததன் அடிப்படையிலே தான் அங்கே திரு உருவ வழிபாடு தோற்றம் பெற்றது. அவை பிற்காலத்தில் அழிக்கப்பட்டமை வரலாறு. இதற்கு நபி அவர்களது ஏக தெய்வக் கோட்பாடே காரணமாக அமைந்தது. ஆனால் அவற்றிற்கு அப்பால் மிக முக்கியமாக பாரசீக அரசும் அதற்கு அப்பால் உரோ-மானிய அரசும் நீர் வள நாகரீகங்களால் ஆக்கப்பட்டவை.

நீர்வள நாகரீகங்களுக்கு பிறிதாக அதுவும் சவுதி அரேபியாவிலே மக்கா நகரம் ஒரு வணிக மையமாக அமைந்திருந்ததால் அங்கு நீர் வளத்திற்கு எந்த வித வாய்ப்புகளும் இருக்கவில்லை. இந்த சமூகம் வணிக நகரச் சமூகமாக இருந்தது. அதிலே இருந்து ஒரு கருத்துருவாக்கத்தை உருவாக்கி, அதை ஒரு மதமாக மாற்றி, அதை ஒரு சமூக இயக்கமாக மாற்றி, அந்த சமூக இயக்கத்தின் கருத்துக்களின் ஊடாக மக்களை பதட்டத்தில் இருந்தும் துன்பத்தில் இருந்தும் பாதுகாத்த பெருமை முகமது நபி(ஸல்) அவர்களையே சாரும்.

அந்த வகையிலே செல்வச் செழிப்புக் காரணமாக தனிமனித சுதந்திரத்தை முதன்மைப்படுத்தியவர்களாக, அந்த மக்கள் தொகுதி வாழுகின்ற பொழுது, மிக செல்வம் படைத்தவர்கள் ஒரு தொகுதியினராகவும் பிறிதொரு தொகுதியினர் வறுமைக்குட்பட்டோராகவும் என இரு தொகுதியினர் காணப்பட்டனர். இதனால் இவர்களிடையே முரண்பாடுகள் தோற்றம் பெற ஆரம்பித்தன. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக ஆரம்பிக்கப்பட்டதே இஸ்லாமிய மதக்கோட்பாடு ஆகும். இம் மதக்கோட்பாட்டிலே ஸஹாத் எனும் கோட்பாடு தான் உழைக்கின்ற உழைப்பினை அல்லது தங்களுடைய மூலதனத்திலே இரண்டு விடயங்களை முக்கியமாக நிறைவேற்ற வேண்டும். தமது செல்வத்தை அவர்கள் முழுமையாக நுகரக்கூடாது. மாறாக ஏழை மக்களுக்கு தங்களுடைய வருவாயில் இருந்து ஒரு பகுதியினை கொடுக்க வேண்டும். மிகுதியை தொடர்ந்து முதலீடு செய்ய வேண்டும். இந்த வகையிலே ஸ ஹாத்தினுடைய பெருநாளாக ஹஜ் பெருநாள் அமைகிறது. இஸ்லாமியர்களுடைய சித்தாந்தத்திலே ஹ ஜ் தியாகத் திருநாள் ஆகும். இது இறைவிசுவாசத்தை ,விசுவாசத்திற்கான தியாகத்தை நிலைநிறுத்துவதோடு தமது செல்வத்திரட்சியை தன்னகப்படுத்தாது பிறருக்கு மறுபங்கீடு செய்ய வேண்டும் அதற்கூடாக உலக சகோதரத்துவத்தை நிலைநிறுத்த வேண்டும். தனிமனித வாதத்தை நிலைநிறுத்துவதற்கு பதிலாக அந்த சமூகம் தனது சமூகத்தினுடைய உறுப்பினர்களுக்கு ஈகையின் சின்னமாக உதவிகளைச் செய்ய வேண்டும். சகோதரத்துவத்தை பேண வேண்டும் என்ற கோட்பாடுகளை நபி அவர்கள் முன்வைத்தார்.

ஹச் பெருநாள் சிறப்புரையிலிருந்து எழுத்துருவிற்கு

**செல்வி தி.பெலினி – ஆசிரியமாணவி**
**விஞ்ஞானநெறி (2023/2024)**

### ஈகைத்திருநாளா? ஈகத்திருநாளா? கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபரின் உரையிலிருந்து .........

ஈகம் என்பது வேறு ஈகை என்பது வேறு. ஈகை என்றால் கொடை. கர்ணன் ஈகையிலே சிறந்தவன் கொடையிலே சிறந்தவன். இப்ராகிம் நபி(ஸல்) ஈகம் கொடுத்தார் ஈகம் என்றால் தியாகம் என்று அர்த்தம். தமது உயிர்களைத் தியாகம் செய்தவர்களை ஈகம் செய்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்காக ஏற்றுகிற சுடருக்கு ஈகச்சுடர் என்று சொல்லுவார்கள். இதிலே பலர் ஈகைச் சுடர் என்றே எழுதுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. தியாகம் செய்ததால் ஏற்றுகின்ற சுடர் ஈகச்சுடர். தியாகத்திற்கு சிறப்பான திருநாள் ஈகத்திருநாள். எனவே ஆசிரியர்கள் பொருட்பிழை இன்றி எழுத கற்றுக் கொள்ளவேண்டும் என்று ஈகத்திருநாள் சிறப்பு ஒன்று கூடலில் அதிபர் அவர்கள் தெரிவித்தார்.

# கலாதீபம் பற்றிய செவ்வி

## 14.06.2024 வெள்ளிக்கிழமை இரவு 7p.m இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் சேவை ஒலிபரப்பியது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையால் மாதந்தோறும் முதலாம் நாளில் வெளியிடப்படும் கலாதீபம் மின்னிதழ் வெளியீட்டினை விதந்து - ஏனைய கல்வி நிறுவனங்களும் இதனைப் பின்பற்றுமாறு ஊக்குவிக்கும் வகையில் 14.06.2024 வெள்ளிக்கிழமை இரவு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தமிழ்ச்சேவை செவ்வி ஒன்றை ஒலிபரப்பியது.
இதில் மூத்த ஒலிபரப்பாளர் நாகபூசணி - கலாதீபம் சஞ்சிகையின் ஆசிரிய மாணவ பத்திரிகையாசிரியர் திரு. செந்தூர்ச்செல்வனைப் (விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவனை) பேட்டி கண்டார்.

**கேள்வி - இம் மாத வெளியீடான கலாதீபம் கடந்த மின்நூலை விட எந்த அளவில் வித்தியாசப்பட்டிருக்கின்றது?**

பதில் - வணக்கம் நாகபூசணி அவர்களே! வழமை போன்று கலாதீபம் எமது கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் மாதாந்த மின்நூலாக வெளிவந்து கொண்டிருப்பதை தாங்கள் அறிவீர்கள். அதுமட்டுமின்றி எமது பிரதம ஆசிரியர் விரிவுரையாளர் செல்வி தர்ஷினி முத்துராஜா அவர்களின் செவ்வியில் இருந்தும் பெற்றிருப்பீர்கள். கடந்த கலாதீபத்தை விட இம்முறை கலாபதீபம் வித்தியாசமான ஒரு விடயத்தை உள்ளடக்கியுள்ளது. எமது கலாசாலையில் ஒவ்வொரு வாரத்தின் புதன்கிழமையும் விசேட ஒன்றுகூடல் நடைபெறுகின்றது. இதன்போது அந்த வாரத்திற்குரிய கருப்பொருளைக் கொண்ட யாதேனும் ஓர் தினத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு அதிதிப் பேச்சாளர் அழைக்கப்பட்டு அவருடைய உரையோடு ஆசிரிய மாணவ உரையும் இடம் பெறுவதாக எங்களுடைய அதிபர் அந்த நாளை நேர்த்தியாக வடிவமைத்திருக்கின்றார்.

அந்த நாளில் அதிதி பேச்சாளராக கலந்து கொண்டிருக்கக் கூடிய ஒருவர் ஓய்வு பெற்ற சமூக சேவை உத்தியோகத்தர், எழுத்தாளருமான வேதநாயகம் தபேந்திரன் அவர்கள் எமது கலாசாலையில் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளை நன்கு அன்றைக்கு சிலாபித்து பேசியதோடு மட்டுமன்றி இந்த கலாதீபத்தில் தனது கருத்தாக




பதிவு செய்திருக்கிறார். அந்த பதிவு சிறப்பான ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது.

அதாவது எமது கலாசாலையில் இந்து, முஸ்லீம், பௌத்த சமயத்தை பின்பற்றுபவர்கள் பல்லின பல் கலாசார ஆசிரிய மாணவர்கள் பயிற்சியைப் பெறுகிறார்கள், எனவே இங்கே எல்லோருக்கும் பொதுவான வடிவமாக கடவுள் வாழ்த்து பொதுமறைத் திருக்குறளில் இருந்து எடுக்கப் படுகின்றது. அது மட்டுமன்றி மனோன் மணியம் சுந்தரநார் எழுதிய தமிழ்த் தெய்வ வணக்கம் "நீராறும் கடலுடுத்து நிலம்மடந்தைக் கெழிலெழுகும்" எனும் பாடல் தமிழ்த்தாய் வணக்க மாக இசைக்கப்படுகின்றது. அது மட்டுமன்றி எமது கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பழைய மாணவர் சங்கீதப்பூசணம் பொன்ஸ்ரீவாமதேவன் அவர்களால் இயற்றப் பட்டு இசையமைக்கப்பட்ட ஆசிரியர் கீதம் இசைக்கப்படுகிறது. இது தொடர்பாக தனது பதிவில் தான் என்ன கோணத்திலே ஆசிரியர் கலாசாலையை சிந்தித்திருந்தேன் அது இன்றைக்கு எப்படி இருக்கின்றது என்ற வகையிலே திருவாளர் வேதநாயகம் தவேந்திரன் அவர்கள் இம்மாத கலாதீபத்திலே பதிவு செய்திருக்கிறார்.

**கேள்வி – கலாதீபம் வெளியீட்டின் போது நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் எவை?**

பதில் - ஆம், நிட்சயமாக ஒரு அருமையான வினாவாக நான் இதைக் கருதுகின்றேன். எந்த ஒரு செயலை செய்வதாக இருந்தாலும் சவால்கள் எதிர்நோக்கப்பட வேண்டியவை தான். கலாதீபம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மாதாந்த மின்னிதழ். ஒரு காலத்திலே கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிகளவு ஆசிரியர் மாணவர்களை உள்ளடக்கி இருந்தாலும் இன்றைய கால சூழ்நிலை கருதி ஆசிரிய மாணவர் எண்ணிக்கை சுருங்கியிருக்கின்றது. இருப்பினும் அதனது வீச்சு குறைய வில்லை. எமது கலாதீபம் மின்னிதழின் பிரதம ஆசிரி யர் விரிவுரையாளர் செல்வி தர்ஷினி முத்துராஜா அவர்களின் அயராத ஈடுபாடும் எமது கலாசாலை முதல்வர் திருவாளர் சந்திரமௌலீசன் லலீசன் அவர்களுடைய வழிநடத்தல், இன்னும் சில விரிவுரையா ளரின் அர்ப்பணிப்பு, ஆசிரிய மாணவர்களின் ஒத்துழைப்பு இவற்றின் காரணமாக கலாதீபம் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. கலாதீபம் வெளியீட்டின் போது எதிர் கொண்ட சவால்கள் என நாம் பார்க்கின்ற போது அந்த சவால்கள் எப்படி இருந்தது என்றால், தரமான ஆக்கத்தைப் பெறுதல், தொழில்நுட்பஅறிவு குறைந்த எண்ணிக்கையான ஆசிரிய மாணவர்களைக் கொண்டு அதனை வெளியிடுவதிலே எங்களுக்கு இருக்கக்கூடிய சில சவால்கள், இருப்பினும் அந்த சவால்களை வெற்றிகரமாக வெற்றிகொண்டு கலாதீபம் மின்னிதழை நாங்கள் மாதம் தோறும் வெளியிடுவதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் ஊக்கமும் காரணமா இருக்கின்றது என்பதை உங்களோடு பகிர்ந்து கொள்வதிலே நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**கேள்வி – ஏனைய இலக்கிய ஆளுமைகள், எழுத்தாளர்கள் முன்வைத்துள்ள கருத்துக்கள் எவை?**

பதில் - சஞ்சிகைகள் நேரடியாக ஆளுமைகளின் கைகளில் கிடைக்கின்ற போது அது ஒரு பரிணாமம். ஆனால் மின்னிதளாக இருக்கின்ற போது அது இன்னொரு பரிணாமம். எங்களைப் பொறுத்தவரையில் எங்களுடைய கலாசாலையின் முன்னாள் அதிபர்கள், முன்னாள் விரிவுரையாளர்கள், முன்னாள் ஆசிரிய மாணவர்கள், கல்விப்புலம் சார்ந்தோர பொறுத்தவரையில் எங்களுடைய கலாசாலையின் முன்னாள் அதிபர்கள், முன்னாள் விரிவுரையாளர்கள், முன்னாள் ஆசிரிய மாணவர்கள், கல்விப்புலம் சார்ந்தோர் ,எமது கலாசாலையில் கற்று புலம் பெயர்ந்து வேறு நாடுகளில் வசிக்கின்றவர்கள். இப்படிப் பலர் கலாதீபத்தினுடைய ஜனரஞ்சக வாசகர் களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கருத்துக்களை தங்களுடைய முகநூல் வாயிலாக எமது முகநூல் பக்கத்திலே பதிவுசெய்வதன் மூலம் எங்களை மேலும் மேலும் ஊக்குவித்து வருகின்றார்கள். அந்த அடிப்படையிலே நாங்கள் இதனை நோக்குகின்ற போது அண்மையிலே கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக இருந்து ஓய்வு பெற்ற கவிஞர். சு.முரளிதரன் அவர்கள் எமது கலாதீபத்தின் கடந்த இதழ் குறித்து வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார்கள். இன்னும் யாழ்ப்பாணத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய புத்தி ஜுவிகள் யாழ்ப்பாண த்தினுடைய ஊடக இலக்கியப் பரப்பிலே இருக்கக் கூடியவர்கள் , கல்வியலாளர்கள் இப்படிப் பலரும் தமது கருத்துக்களை எம்மோடு பகிர்ந்து கொண்டிருக் கின்றார்கள். எல்லோருடைய ஆதங்கமும் ஒன்று தான். இந்த மின்னிதழை எவ்வாறு மாதம் தோறும் நீங்கள் சிறப்பாக வெளிவரச் செய்கின்றீர்கள். அதனுடைய இரகசியம் என்ன என்றால் அதற்கு என்ன பதில் என்றால் இது வெள்ளிடை மழையாக நான் சொல்லிக் கொள்வது எங்களுடைய அதிபருடைய வழிநடத்தல், பிரதம ஆசிரியரும் விரிவுரையாளருமான செல்வி தர்ஷினி முத்துராஜா, அவருடைய அர்ப்பணிப்பு அவர் எம்மை இயக்குகின்ற பாங்கு ஆசிரிய மாணவர்கள் மற்றும் ஏனைய வளவாளரை ஒருங்கிணைத்து இந்த செயற்பாட்டை அவர் வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறார்.

**கேள்வி – புதிய படைப்பில் அது தொடர்பாக மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ள இருக்கின்றீர்களா? அப்படியானால் அதை விளக்கமுடியுமா?**

பதில் - ஒவ்வொரு கலாதீப மின்னிதழும் சிற்பி செதுக்குகின்ற சிலையைப் போல மெருகூட்டப்படுகின்றது நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல ஒரு காலத்திலே

பல்கலைக்கழகம் உருவாவதற்கு முன்னர் ஆசிரியர் கலாசாலைகள் தான் ஆசிரியர்களை உருவாக்கியது.

மிகப் பெரிய கல்வி நிறுவனங்களாக அவை அடை யாளப்படுத்தப்பட்டிருந்தன. இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு அடிநாதமான ஆசிரியர்களை உற்பத்தி செய்து வழங்கிய பெருமை ஆசிரிய கலாசாலையைச் சாரும். அதிலே நூற்றாண்டு கண்ட பெருமையோடு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை காணப்படுகின்றது. இந்தக் கலாசாலைக்கு பல ஆளுமைகள் அதிபர்களாக இருந்திருக்கின்றார்கள். பல ஆளுமைகள் விரிவுரையாளராக கடமை ஆற்றி ஓய்வு பெற்றிருக்கின்றார்கள்.

சிலர் நிலத்திலே இருக்கின்றார்கள், சிலர் எம்மோடு உள்ளத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நிலத்திலே வாழ்ந்து கொண்டிருக்க்கூடிய ஆற்றல் மிக்க ஆளுமைகள் சமகால கல்விச்சிந்தனைகள் குறித்து என்ன நினைக்கின்றார்கள், இந்த மாணவர்களுடைய கல்வி இந்தக் கல்வி மெருகூட்டப்படுவது எவ்வாறு எந்த அடிப்படையில் அவர்களின் சிந்தனை சமூகத்திற்கு கொண்டு சென்று கொடுக்கின்ற ஒரு பணி கலாதீபத்திடம் இருப்பதாக கலாதீபத்தினுடைய ஆசிரிய குழுமம் கருதுகின்றது. அந்த வகையிலே எமது கலாசாலையின் மூத்த விரிவுரையாளரில் ஒருவரும் சிறந்த நடன ஆற்றுகையாளருமான கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவனேசன் அம்மையார் அவர்களுடைய ஆயமைக்களத்தை அடிப்படையாக கொண்டு எங்களுடைய இனிவரப் போகின்ற கலாதீப மின்னிதழ் மலரபோகின்றது. இது ஆளுமைச் சிறப்பிழாக இனி வர இருக்கின்றது. இந்த ஆளுமைச் சிறப்பிதழில் நீங்கள் பல்வேறு சிறப்புக்களைக் காணலாம். ஏனென்றால் எங்களுடைய மூத்த ஆளுமைகள் இன்றைய கல்விக்குறித்து அவருடைய சிந்தனை எவ்வாறு இருக்கின்றது என்பது குறித்து நாங்கள் ஆளுமைச் சிறப்பிதழில் வெளிவிட விரும்புகின்றோம்.

**கேள்வி – ஏனைய பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள் இது பற்றி என்ன கூறுகிறார்கள்?**

பதில் - உண்மையில் ஏனைய பல்கலைக்கழகங்கள் தமிழ் மொழி மூலமான கல்வியியல் கல்லூரிகள் எங்களுடைய வெளியீட்டை ஒரு ஆச்சரியக் குறியீட்டோடு நோக்குகின்றார்கள். ஏனென்றால் இது எவ்வாறு சாத்தியம் விரல்விட்டு எண்ணக் கூடிய ஆசிரிய மாணவர்களை தம் வசம் வைத்திருக்கும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையினால் எமது கலாசாலை ஆசிரிய மாணவருடன் ஒப்பிடும் போது பலமடங்கு மாணவரை வைத்திருக்கக் கூடிய தமிழ் மொழி மூலமான கல்வியியற் கல்லூரிகள் இதிலே சற்று பின்தங்கி இருப்பது ஏன் என்ற காரணத்தால் அவர்கள் எங்களை ஆச்சரியமாகப் பார்க்கின்றார்கள். ஆனால் நான் இதிலே அழுத்திக் கூறுவது என்னவென்றால் “**எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு**” என்று வள்ளுவருடைய வாக்குக்கமைய எங்களுடைய அதிபர் அவர்கள் மிக சிறப்பான ஒரு பாதை ஒன்றை வகுத்துத்தந்திருக்கின்றார். அந்த வகையிலே நாங்கள் இணைந்து எமது பிரதம ஆசிரியரின் வழிப்படுத்தலிலே இந்த ஆக்கங்களை சேகரித்து மின்னிதழை உருவாக்குகின்றோம். இந்த மின்னிதழிலே குறிப்பாக எமது ஆசிரியர் கலாசாலையினுடைய அந்த மாதத்திற்குரிய எல்லா விடயங்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமைப்படுத்தல் அங்கே ஆவணப்படுத்தப்படு கின்றது. அதுமட்டுமில்லை எங்கள் அதிபருடைய வழிப்படுத்தலுக்கமைய கோப்பாய் ஆசிரியர் கலாசாலை யினுடைய கலாதீப மின்னிதழ் ழேழடயபயஅ. ஊழஅ என்ற இணையத்தளத்திலும் ஆவனப்படுத்தப்படுகின்றது. இது ஒரு நீண்ட கால முயற்சி கோப்பாய ஆசிரியர் கலாசாலை என்ன செய்கிறது என்று கேட்பவர்களுக்கு இது ஒரு விளக்கம்.

ஆகவே பலதரப்பட்ட வேலைக்களுவுக்கு மத்தியிலும் பலவேறு கல்வி நிறுவனம் இருந்த போதிலும் தொடர்ச்சியான கலாதீபம் மின்னிதழை வெளிவரச் செய்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மகுடம் சூடியிருக்கின்றது என்பதை அழுத்தித் தான் சொல்ல வேண்டும். சோல்லாமல் இருக்க முடியாது. இதற்கு பல பேருடைய அர்ப்பணிப்பான உழைப்புக்காரணம். ஏனென்றால் இங்கே வெளியிடுபவர்கள் அந்த துறையிலே இருக்கிறவர்கள் யா- வருக்கும் எந்த விதமான ஊதியம் கிடையாது நலன் ஒன்று தான் முக்கியம். சமூகப் பொறுப்புமிக்கவர்கள் ஆசிரியர்கள் அந்த எல்லோர் மட்டத்திலும் ஏற்படுத்துவதற்காக எமது கலாசாலை இந்த கலாதீபத்தை வெளியிட்டு ஒரு சமூன பொறுப்பு மிக்க கலாசாலையாக நூற்றாண்டு கடந்து பரிணமித்திருக்கின்றது. ஏன்பதை தெரிவித்து மகிழ்கின்றேன்.

# ஆசிரிய கலாசாலை 2020/2021 கல்வியாண்டு அணியினருக்குரிய பெறுபேறுகள் 15.06.2024 வெளியிடப்பட்டது.

இதுவரை கலாசாலைக்கு ஆசிரிய மாணவர்களால் அறியத்தரப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் 2020/2021 அணிக்குரிய பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 10 A அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்ற ஆசிரிய மாணவர்கள் அனைவருக்கும் கலாசாலை சமூகத்தின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

30.06.2024 வரை பரீட்சைப் பெறுபேறுகள் கலாசாலையை வந்தடையாத காரணத்தல் முழுமையான விபரங்களைத் தரமுடியவில்லை.

மேலும் 2021//2022 அணியினர் கடந்த டிசம்பர் மாதம் கற்கை நெறியை முடித்த நிலையில் அவர்களுக்குரிய விண்ணப்பம் இந்த மாத இறுதியில் கோரப்பட்டு ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சை இடம்பெற வாய்ப்புகள் உண்டு என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.



Pragash Thirumagal
Maths
12A 02B



PUNNIYAMOORTHTHY KOJINA
Maths
12A 02B



IRUTHAYARAJ JENI
Maths
12A 02B



ANYONY AMALASOTHY THARSIKA
Commerce
12A 02B



FARSAN FATHIMA NUSLA
Maths
11A 03B



MOHANANTHAM ASHOKKUMAR
Maths
11A 03B



CHANDRAKANTHAN KUHENDINI
Tamil
11A 02B



DOMINIC DAISY SHIYAMINI
Commerce
11A 03B



ANANTHAN ASHOK
Maths
10A 04B



MURUKESU DEKALA
Hinduism
10A 03B



UMAHARAN KAYATHIRY
Primary Education
10A 03B



SUBAIDEEN JUMAIYA
Maths
10A 03B 01C

# கலாசாலை ஆசிரிய மாணவர்கள் வன்னி சென்று களக்கற்கையில் ஈடுபட்டனர்

கோப்பாய் ஆசிரியர் கலாசாயையின் ஆசிரிய மாணவர்களின் களக் கற்றலின் ஓர் அங்கமான கல்விச் சுற்றுலா இடம்பெற்றது.

பிரதி அதிபர் திரு க.செந்தில்குமரன் (நிதி, நிர்வாகம்) அவர்களின் ஏற்பாட்டில் இந்த களப்பயணம் கடந்த 26.06.2024 புதன்கிழமை ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

கலாசாலையின் அதிபர், பிரதி அதிபர், விரிவுரை யாளர்கள், முகாமைத்துவ உத்தியோகத்தர், மற்றும் ஆசிரியமாணவர்கள் என நாற்பது பேர் களப்பயணத்தில் கலந்து கொண்டனர். காலை 6.30 மணிக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட தனியார் பேரூந்து மூலம் தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

தாளையடி கடற்கரைக்குச் சென்று கடற்கரை சாகியங்களை அவதானித்தனர். அத்துடன் கடற்கரை சூழல் தொகுதி பற்றிய விளக்கங்களை உயிரியல் விரிவுரையாளர்களான திரு பொ.சற்குணநாதன், திரு க.செந்தில்குமரன் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்ற களக்கற்கைக் குழுவினர் அங்கு நடைபெறும் செயற்பாடுகளை அவதானித்தனர். பயிர் ஆராய்ச்சி இடம்பெறும் இடத்தை அவதானித்த பின்பு - ஒருநாளின் வெப்பநிலை மழைவீழ்ச்சி காற்று வீசும் திசை என்பவற்றை பதிவு செய்யும் முறைமை பற்றியும் கேட்டறிந்து கொண்டனர்.

தொடர்ந்து இரணைமடு நீர்பாசனக் குளத்தைப் பார்வையிட்டு இயற்கை பாசனம் மற்றும் மேட்டுநில செய்கைக்காக நீர் திறந்து விடப்படும் செயன்முறையினையும் அவதானித்தனர். தொடர்ந்து முல்லைத்தீவு நகரைநோக்கி பயணித்த களக்கற்கை குழுவினர் மு/உடையார்கட்டு மகா வித்தியாலயத்தின் பாடசாலை அமைப்பு மற்றும் பாடசாலைச் செயற்பாடுகள் பற்றி அறிந்து கொண்டனர் பாடசாலையின் பிரதி அதிபர் மாதிரிப் பாடசாலை எவ்வாறு அமைய வேண்டும் என தேவையான விளக்கங்களை வழங்கியதோடு பாடசாலையினையும் சுற்றிக் காண்பித்தார்.

நண்பகல் பன்னிரண்டு மணிக்கு வற்றாப்பனை கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்த குழுவினர் மதிய பூசையினை தரிசித்தனர். இதன்போது கலாசாலை அதிபர் வற்றாப்பனை கண்ணகை அம்மன் ஆலய வரலாற்றை எடுத்துக் கூறியதோடு சிலப்பதிகார கண்ணகிக்கும் இலங்கைக்கும் உள்ள உறவுமுறை குறித்தும் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு பிரதேசத்தில் கலாசாலையில் கல்விகற்ற முன்னாள் ஆசிரிய மாணவர்கள் களக்கற்கைக் குழுவினரை வரவேற்று உபசரித்தனர்.

இவர்களில் முள்ளியவளை றோ.க. ஆசிரியை திருமதி ஸ்ரீரஞ்சினி கங்காதரன் (கலாசாலை 2014/2015 அணி ஆரம்ப கல்வி) முக்கியமானவராவார்.

தொடந்து ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு சென்ற குழுவினர் அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவதள இராஜகோபுத்தினை தரிசித்தனர் தொடர்ந்து கதமது களப்பயணத்தை

நிறைவுசெய்து பூநகரி ஊடாக சங்குப்பிட்டி கேரதீவு பாலத்தின் வழியாக கலாசாலையை வந்தடைந்தனர்.

கலாசாலை கற்றல் செயற்பாடுகளுக்கு ஒரு புத்துணர்ச்சியையும் புதிய பட்டறிவை வழங்கிய களக்கற்கையாகவும் இச்செயற்பாடுகள் அமைந்திருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கல்விக் களப்பயணம் தொடர்பான பதிவுகள்

## பட ஒருங்கிணைப்பு ~ மு.கஜேந்திரன் - ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)




கல்வி சுற்றுலாவின் கற்றல் செபற்பாடாக தாளையடி



வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில்.



பிராந்திய விவசாய திணைக்களம் கிளிநொச்சி



முள்ளியவளை றோ.க. ஆசிரியை திருமதி ஸ்ரீ ரஞ்சினி கங்காதரன்
(கலாசாலை 2014/2015 அணி ஆரம்ப கல்வி)




இரணைமடு நீர்ப்பாசனக் குளம்




மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்.







# விஞ்ஞான கணித கண்காட்சி தொடர்பான பதிவுகள்















